**சார்பு நீதிமன்றம், சீர்காழி.**

S.C.67/2022

2025 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 06-ம் நாள் வியாழக் கிழமை PW2 -இன் வாக்குமூலம், 1873 ஆம் ஆண்டு இந்தியசாட்சிய சட்டப் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திருமதி. S.மும்தாஜ், B.Sc., B.L., சார்பு நீதிபதி, சீர்காழி அவர்களால் சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு, பதிவு செய்யப்படுகிறது.

LW2 Examined as PW2 .

| | | |
|---|---|---|
| Date | : | 06.03.2025 |
| Name | : | ஹரிகிருஷ்ணன் |
| Husband Name/Father Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Post | : | |
| Religion | : | |
| Age | : | |

A7 absent. A1, 4, 5, 6 present.

**சாட்சி அழைக்கப்பட்டு உறுதிமொழி செய்யப்பட்டு முதல் விசாரணை** நான் தற்போது ஆலங்காட்டில் குடியிருந்து விவசாய வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியாது. வழக்கு பற்றி எதுவும் தெரியாது. போலிசார் என்னை விசாரணை செய்யவில்லை.

**அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி அனுமதி கோரியதன் பெயரில் அனுமதி வழங்கப்பட்டது.**

**அரசுதரப்பு குறுக்குவிசாரணை**

கடந்த 24.07.2020 ம் தேதி மதியம் இளையமதுக்கூடம் மேலவெளியில் ஜெயபால் மற்றும் அம்சராஜ் என்பவரும் அவருடைய சொந்த இடத்தில் மண் அள்ளிக் கொண்டிருந்தார்கள் என்றும் அதை பார்வையிட சென்ற ஊராட்சி மன்ற தலைவர்கள் அகோரம் மற்றும் நானும் ராஜாவும் மற்றும் பஞ்சாயத்து உறுப்பினர்களும் சென்று பார்த்தோம் என்றும் அகோரம் என் அனுமதி இல்லாமல் எப்படி மண் எடுக்கிறீர்கள் என்று கேட்டார் என்றும் தாசில்தாரிடம் அனுமதி வாங்கினீர்களாக என்றும் அப்போது ஜெயபால் மற்றும் அம்சராஜ் இருவரும் அகோரத்திடம் அப்படி தான் எடுப்போம் முடிந்ததை பார்த்துக் கொள்ளுங்கள் என்று சொன்னதாகவும் அப்போது அகோரம் திருவெண்காடு காவல் நிலையம் மற்றும் தாசில்தாருக்கு

தொகைபேசி வாயிலாக தகவல் சொன்னார் என்றும் அப்போது ஜெயபாலுடன் இருந்தவர்கள் பயங்கர ஆயுதங்களுடன் ஓடி வரவே ஊராடட்சி மன்ற தலைவர் அகோரம், என்னையும் எங்களுடன் வந்தவர்களை தாக்க முற்படும் போது கோபாலகிருஷ்ணன் இளைமதுக்கூடத்திற்கு நாட்டான்மை என்பதால் இருதப்பினரை பேசி தீர்த்துக் கொள்ளலாம் என்று ஊராட்சி மன்ற தலைவரை காரில் அனுப்பி விட்டு ஜெயபாலிடமும், அம்சராஜிடமும் ஊர்காகரர் என்ற முறையில் பேசி விட்டு அவரது இருசக்கர வாகனத்தில் செல்லும் போது ஜெயபாலலின் மைத்துனர் நந்தன் தலைமையில் ஜெயபால் மற்றும் கேசன் மகன் அம்சராஜ் , இளக்கியராஜ், கனி (எ) தயாகரன் பாண்டியன் மற்றும்சிலர் ஒன்று சேர்ந்து கொலை செய்யும் நோக்கத்துடன் அரிவாள் மற்றும் இரும்பு ராடுடன் வந்து தகாத வார்த்தைகளால் திட்டினார்என்றும் அப்போது நந்தன் என்பவர் எனது அத்தான் ஜெயபாலலிடன் ஏன் வம்பு வளககிறீங்க என்று கேட்டு கோபாலகிருஷ்ணனை இத்தோடு தொலைந்து போடா என்று சொல்லிக் கொண்டு அவர் வைத்திருந்த அரிவாளால் அவரது தலையில்வெட்டியபோது அவர் விலக அந்த வெட்டு அவர் இடது பக்க காலில்விழுந்து ரத்த காயம் ஏற்பட்டது என்றும் அவருடன் வந்த அம்சராஜ் என்பவர் கோபாலகிருஷ்ணனை செத்து போடா என்று சொல்லி அவர் வைத்திருந்த அரிவாளல் வெட்டவே அந்த வெட்டு இடது பக்க கழுத்தில்பட்டு ரத்த காயம் ஏற்பட்டது என்றும் அபபோது சத்தம் போடவே அங்கு நின்ற நானும் ராஜா ஓடி வரவே சென்று விட்டார்கள் என்றும் மேற்படி சம்பவங்களை போலிஸ் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிக்கு ஆதரவாக உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை - இல்லை**